இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 189 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 06 – செவ்வாய்க்கிழமை 18 பிப்ரவரி 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 189: Thiruvalluvar Year - 2056 - Maasi 06 - Tuesday 18 February 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

### அறிஞர் அண்ணா அவர்களால் கொண்டு வரப்பட்ட

### இரு மொழிக் கொள்கைக்கு எதிராக மும்மொழித் திட்டத்தை திணிக்க முயற்சிக்கும்

# ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

## ‘கல்விக்கு – ஒன்றிய அரசு ஏகபோக எஜமானர்கள் அல்ல’ என்றும் விமர்சனம்!

**சென்னை, பிப்.18 -**

**அறிஞர் அண்ணா அவர்களால் கொண்டு வரப்பட்ட இரு மொழிக் கொள்கைக்கு எதிராக மும்மொழித் திட்டத்தை திணிக்க முயற்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நடவடிக்கைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**‘கல்விக்கு, ஒன்றிய அரசு ஏகபோக எஜமானர்கள் அல்ல’ என்றும், ‘திமிராகப் பேசினால் தமிழர்கள் குணத்தை டெல்லியில் பார்க்க வேண்டி இருக்கும்’ என்றும் குறிப்பிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

தேசிய கல்வி கொள்கையை தமிழ்நாடு அரசு இதுவரை ஏற்காததால் கல்விக்காக ஒன்றிய அரசு ஒதுக்க வேண்டிய நிதியை இன்னும் ஒதுக்கவில்லை. இந்தத் திட்டத்தை கேரளா, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களும் இதுவரை ஏற்கவில்லை. இதனால்



மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டிய நிதியை ஒன்றிய அரசு கொடுக்காமல் உள்ளது. குறிப்பாக தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய ரூ.2,152 கோடியை ஒன்றிய அரசு விடுவிக்கவில்லை.

மேலும் அந்த நிதியை பா.ஜ.க. ஆளும் உத்தரபிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களுக்கு பகிர்ந்தளித்து விட்டதாக ஒன்றிய அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கைக்கு ஏற்கனவே முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தேசிய கல்வி கொள்கையை ஏற்காவிட்டால் நிதி தர முடியாது என ஒன்றிய அரசு ஆணவத்துடன் தெரிவித்துள்ளது.

**ஒன்றிய அமைச்சரின் ஆணவப் பேச்சு!**

உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் காசி தமிழ் சங்கமம் 3.0 நிகழ்ச்சியில் ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் கலந்து கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தர்மேந்திர பிரதான், “மும்மொழி கொள்கையை பிற மாநிலங்கள் ஏற்கும்போது, தமிழ்நாடு ஏற்க மறுப்பது ஏன்?” என கேள்வி எழுப்பினார். தொடர்ந்து அவர் கூறுகையில், “தமிழ்நாட்டுக்கு நிதி நிலுவையில் இருப்பது எனக்கு தெரியும். ஆனால், புதிய தேசிய கல்வி கொள்கையை தமிழ்நாடு ஏற்று கொண்டால்தான் நிதி விடுவிக்கப்படும். மும்மொழி கொள்கையை ஏற்கா விட்டால் நிதி ஒதுக்க சட்டத்தில் இடமில்லை” என்று கூறினார்.

**சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!**

இதற்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் களின் சமூக வலைதளப் பதிவில் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

“They have to come to the terms of the Indian Constitution” **என்கிறார் ஒன்றியக் கல்வி அமைச்சர். மும்மொழிக் கொள்கையை** ‘rule of law’ **என்கிறார்.**

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எந்தப் பிரிவு மும்மொழிக் கொள்கையைக் கட்டாயமாக்குகிறது? எனக் கல்வி அமைச்சரால் கூற முடியுமா?**

**மாநிலங்களால் ஆனதே இந்திய ஒன்றியம்! ஒத்திசைவுப் பட்டியலில் உள்ளதுதான் கல்வி! அதற்கு ஒன்றிய அரசு ஏகபோக எஜமானர்கள் அல்ல!**

**“மும்மொழிக் கொள்கையை ஏற்கும் வரை தமிழ்நாட்டுக்கு நிதி கிடையாது” என்று** blackmail **செய்யும் தடித்தனத்தைத் தமிழர்கள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள்!**

**எங்கள் உரிமையைத்தான் கேட்கிறோம்! உங்கள் தனிச்சொத்தைக் கேட்பது போல் திமிராகப் பேசினால், தமிழர்களின் தனிக்குணத்தையும் டெல்லி பார்க்க வேண்டியிருக்கும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து பதிவிட்டுள்ளார்.

---

### தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து

# ‘இந்தியா’ கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## சென்னையில் இன்று நடைபெறுகிறது!

தமிழ்நாட்டின் உரிமைகளைச் சிதைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் ஒன்றிய மோடி அரசு எடுத்து வருகிறது. புதிய கல்விக் கொள்கையை ஏற்கும் வரை தமிழ்நாடு கல்வித்துறைக்கு நிதி தர இயலாது என ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் மிரட்டுகிறார். நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் தமிழ்நாட்டிற்கான நிதியைத் தருவதில் பாரபட்சம் காட்டி, பட்ஜெட்டில் தொடர்ந்து தமிழ்நாட்டுக்கான திட்டங்களைப் புறக்கணிக்கிறார்; பதவிக்காலம் முடிந்து போன ஆளுநரை வைத்துக் கொண்டு அத்துமீறல்கள்; யுஜிசி மூலம் மாநிலத்தின் கல்விக் கட்டமைப்பைச் சிதைப்பதற்கான நடவடிக்கைகள்; தொடர்ச்சியான திராவிட - தமிழ் வெறுப்பு நடவடிக்கைகள்; மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தித் திணிப்புக்கான முன்னெடுப்புகள் எனத் தமிழ்நாட்டை வஞ்சித்துக் கொண்டிருக்கும் மோடி அரசை வீறுகொண்டு எதிர்க்க வேண்டிய சூழலை உருவாக்கி வருகிறார்கள்.

தமிழர்கள் தனித்துவமானவர்களாக இருப்பதும், கல்வி - வேலைவாய்ப்பு - சமூகநீதி - வாழ்க்கைத்தரம் என அனைத்து வகையிலும் உயர்ந்திருப்பதும் மோடி அரசின் கண்களை உறுத்துகிறது. அது, அரசியல்ரீதியாகப் பா.ஜ.க.,வை அண்டவிடாத தமிழ்நாட்டு மக்களின் மீது வெறுப்பை உமிழ்கிறது. பிளவுவாத சக்திகளுக்கு எதிராக ஓரணியில் நிற்கும் தமிழ்நாட்டை வீழ்த்திவிட முயற்சிக்கிறது.

வீழ்த்த முயற்சிக்கும் போதெல்லாம் தமிழ்நாடு ஒன்றிணையும்! எதிரி எந்த வடிவில் வந்தாலும் துணிந்து நிற்கும்!

அப்படியான ஒரு சூழலை வலிந்து உருவாக்கி வரும் **மோடி அரசைக் கண்டித்து முதற்கட்டமாக அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” இன்று (பிப்ரவரி 18 செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணியளவில் சென்னை ஆட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெறுகிறது.**

தமிழ்நாட்டிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்ளும் ஒன்றிய அரசு தமிழ்நாட்டை வஞ்சிப்பது ஏன் என உரக்கக் குரல் எழுப்புவோம்! தமிழ்நாட்டின் உரிமைகள் மீது கை வைத்தால் சிலிர்த்து எழுவோம் என்பதை உணர்த்துவோம்!

**ஒன்றிணைவோம்! உரக்கக் குரல் எழுப்புவோம்!!**
**உரிமைகளை மீட்போம்!!**

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

**ஆசிரியர் கி.வீரமணி**
தலைவர்,
திராவிடர் கழகம்

**கு.செல்வப்பெருந்தகை**
தலைவர்,
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

**வைகோ**
பொதுச்செயலாளர்,
ம.தி.மு.க.

**பெ. சண்முகம்**
செயலாளர்,
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி,
தமிழ்மாநிலக் குழு

**ஆர். முத்தரசன்,**
செயலாளர்,
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி,
தமிழ்மாநிலக் குழு

**கே.எம்.காதர்மொகிதீன்**
தலைவர்,
இந்திய யூனியன் முஸ்லீம் லீக்

**தொல். திருமாவளவன்**
தலைவர்,
விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

**அருணாசலம்**
பொதுச்செயலாளர்,
மக்கள் நீதி மய்யம்

**எம்.எச்.ஜவாஹிருல்லா,**
தலைவர்,
மனிதநேய மக்கள் கட்சி

**ஈ.ஆர். ஈஸ்வரன்**
பொதுச்செயலாளர்
கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி

**தி.வேல்முருகன்**
தலைவர்
தமிழக வாழ்வுரிமைக் கட்சி